தமிழ் நாடு சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, 1973 ஆகஸ்ட் 2.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 10.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு

திரு. ஆர். என். அரங்கநாதன், திரு. கே. பாலதண்டாயுதம் ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சோளிங்கபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1967-ம் ஆண்டு முதல் 1971-ம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. ஆர். என். அரங்கநாதன் அவர்கள் 23—5—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

கோயம்புத்தூர் பாராளுமன்றத் தொகுதியிலிருந்து 1971-ம் ஆண்டு மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. கே. பாலதண்டாயுதம் அவர்கள் 31—5—1973-ம் நாள் ஏற்பட்ட விமான விபத்தில் எதிர்பாராதவிதமாக மறைந்ததைக் குறித்தும்,

இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரைஇழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் இப்பேரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

2. இரங்கல் தீர்மானம்.

மத்திய அமைச்சர் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்களின் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்திய அரசின் உருக்கு சுரங்கத் துறை அமைச்சராக இருந்த திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் 31—5—1973 அன்று புது தில்லி அருகே ஏற்பட்ட விமான விபத்தில் உயிரிழந்த துயரமான செய்தியை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதுகுறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]